**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 126/2024**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. அமுதா** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. சசிக்குமார்** | **Calling** | : | |
| **Village** | : | **பேகம்பூர்** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **44** |
| | | | **Dated** | : | **11.12.2024** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**A1 to A3 present, But their counsel not present. The accused represented that they crossed the witness by their counsel on some other date. Prosecution counsel present. Hence the witness examined, in the presence of accused.**

**பட்டியல் சாட்சி 1 திருமதி. அமுதா ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் பகல் 12.30 மணி இருக்கும். என் கணவரின் அண்ணனின் மனைவி பெரிய பள்ளபட்டியில் 7-வது வார்டு கவுன்சிலராக இருந்தார். அன்றைய தினம் தண்ணீர் பிரச்சனை சம்மந்தமாக பஞ்சாயத்து நடந்து கொண்டு இருந்தது. அப்போது 3-வது எதிரி என் கணவரை அழைத்து பேசிக் கொண்டு இருந்தார். அப்போது அவருக்கு பின்னால் இருந்து 1-வது எதிரி மாரிமுத்து அரிவாளால் பின் தலையில் வெட்டினார். அவர் கையால் தடுக்க முற்பட்ட போது வலது கையில் உள்ளங்கையிலும், முன்கையிலும்

வெட்டு விழுந்தது. நானும், சின்னகாளை என்பவரும் அவரை ஆட்டோவில் ஏற்றி திண்டுக்கல் பெரிய ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கா கொண்டு சேர்த்தோம். அங்கு என் கணவருக்கு தலையில் மூளையில் பாதிப்பு ஏற்பட்டு இருப்பதால் மதுரைக்கு எடுத்து செல்ல சொன்னார்கள். அவருக்கு மோசமான காயம் ஏற்பட்டு இருக்கிறது என்று சொல்லி, அங்கு சிகிச்சை அளித்தார்கள். போலீசார் மருத்துவமனையில் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடன் மேற்படி சின்னகாளை என்பவர் சாட்சி கையெழுத்து போட்டு இருக்கிறார். மேற்படி புகார் Ex. P1. என்னிடம் காட்டப்படும் அரிவாள் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டது போல இல்லை. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**</u>

எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை ஆகாததால் எதிரிகளின் வேண்டு கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2024.12.11 18:09:53 +0530